

சாதி ஒழிப்பே ! சமூக விடுதலை !!







# ஆதித்தமிழர் பேரவை
# AATHITHAMIZHAR PERAVAI
தமிழ்நாடு

நாள் : 22-3-2012


## பத்திரிக்கை செய்தி

1. மூன்று சதவீத இடஒதுக்கீடு அருந்ததியருக்கு 2009ல் நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு தமிழ்நாட்டில் பல துறைகளில் அந்த சட்டம் நிறைவேற்றப்படவில்லை. குறிப்பாக பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர், இணைப் பேராசிரியர் மற்றும் பேராசிரியர் போன்ற பணிகளில் அருந்ததியருக்கு இடஒதுக்கீடு வழங்குவதில் திட்டமிட்டு மறுக்கப்படுகிறது. இந்த நிலை பல்கலைக்கழகத்தில் மட்டுமல்ல தொடக்கப்பள்ளி ஆசிரியர் தேர்விலும் கூட (தேனி மாவட்டம்) முறைகேடு செய்யப்பட்டு அருந்ததியருக்கு வழங்கப்பட்ட முன்னுரிமை முற்றிலும் பறிக்கப்படுகிறது.இந்த வகையில் உயர்நீதிமன்றத்தில் இருக்கும் 45 உயர்நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவர் கூட அருந்ததியர் இல்லை.
2. தற்போது தமிழ்நாட்டிவுள்ள 22 மாநில பல்கலைக்கழகங்களிலும் துணைவேந்தர் யாரும் அருந்ததியர் இல்லை.குறிப்பாக 30 ஆண்டுகளாக மேற்கு மண்டலத்தில் இயங்கி வரும் பாரதியார் பல்கலைக்கழகம் முறைகேட்டில் முத்தாய்ப்பாய் விளங்குகிறது. மேற்கு தலத்தில் அருந்ததியர்களும், கவுண்டர்களும் அதிக எண்ணிக்கையில் இருக்கும்போது தகுதி உள்ளவர்கள் இருந்தும் ஒரு பட்டியல் இனத்தவரோ அல்லது ஒரு அருந்ததியரோ இதுவரை பாரதியார் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக அமர்த்தப்படவில்லை.
3. இதில் வேடிக்கை என்னவென்றால் பாரதியார் பல்கலைக்கழகத்தில் மொத்தம் ஆசிரியர் எண்ணிக்கை சுமார் 160. இதில் பட்டியல் இனத்தவர் மொத்தம் 32. அருந்ததியர் ஒரே ஒருவர் மட்டுமே உள்ளார். 30 ஆண்டு கால பாரதியார் பல்கலைக்கழக வரலாற்றில் அருந்ததியர் மக்களுக்கு எதிராக மிகப் பெரிய சதிவலை பின்னப்பட்டுள்ளது.

சக்தி ரமா அடுக்ககம், 3-வது தளம், 'இ' 2/2ஏ, கிழக்கு லோகமான்ய வீதி,
இரத்தினசபாபதிபுரம், கோவை-641002. பேசி: 94430 - 84642, 94427 01235
மின் அஞ்சல் : adhiyamaanperavai@gmail.com
இணையதளம் : www.aathithamizharperavai.com

சாதி ஒழிப்பே ! சமூக விடுதலை !!







# ஆதித்தமிழர் பேரவை
# AATHITHAMIZHAR PERAVAI

தமிழ்நாடு

நாள் :

4. பல்கலைக்கழக மானியக்குழு (UGC) தனது சுற்றறிக்கையில் 31-03-2012க்குள் SC/ST பின்னடைவுக் காலியிடங்களை சிறப்பு நியமனத் தேர்வின் ( Special recruitment drive) மூலம் நிறைவு செய்ய ஆணையிட்டும் இந்த ஆதிக்க சாதி நிர்வாகம் இந்த நிமிடம் வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.ஆனால் அதே நேரத்தில் UGC தற்காலிக ஆசிரியர் நியமனங்கள் 35 பேர் தேர்ந்தெடுக்க விளம்பரம் கொடுத்ததில் "SC(A) க்கு 5 பேர்" ஒருவர் மட்டுமே SC(A) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மீதம் நான்கு பேருக்கு நேர்காணலே நடத்தப்படவில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால் தேர்வு செய்யப்பட்ட 26 பேரில் 17 பேர் ஒரே சமூகத்தை ( கவுண்டர்) சேர்ந்தவர்கள். இது மட்டுமல்லாமல் இந்த தற்காலிக ஆசிரியர் பணியாளர்கள் 31-03-2012ல் இவர்களது பணி நியமனம் முடிவடையும் நிலையில் பல்கலைக்கழக மானியக்குழுவின் நெறிமுறைகளை மீறியும், அரசின் இடஒதுக்கீடு அரசாணைகளை மீறியும், மீண்டும் பணியமர்த்த முயற்சி மேற்கொள்ளப்படுவதின் மூலம் SC அருந்ததியர் பணிவாய்ப்பு திட்டமிட்டு மறுக்கப்படுகிறது. இதை பாரதியார் பல்கலைக்கழக ஆட்சிக்குழு வேடிக்கை பார்த்துக் கொண்டுள்ளது.
5. பல்கலைக்கழக மானியக்குழு (UGC) தனது 11வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பட்டியலின மாணவர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட நிதி சுமார் ஒன்றரைக் கோடி ருபாயை Remedial coaching classes மாணவர்களின் குறை களைவு பயிற்சி வகுப்புகள் நடத்த ஒதுக்கப்பட்ட நிதியை ஐந்தாண்டுகளாக செலவிடாமல் நிதியாண்டு இறுதியில் அவசர அவசரமாக செலவிட ஆணையிடப்பட்டுள்ளது. இதனால் பட்டியலின மாணவர்களுக்கு கிடைக்க வேண்டிய பயனை வஞ்சனையாக திட்டமிட்டு இந்த நிர்வாகம் சூழ்ச்சியோடு தடுத்து நிறுத்தியுள்ளது. இது தொடர்பாக விசாரணை கமிஷனை அமைக்க வேண்டும்.
6. பாரதியார் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழுவிலும் ( சிண்டிகேட்) மற்றும் தகுதி நிலை கண்டறியும் குழுவிலும் ( Scrutinizing committee) பட்டியல் இனத்தோருக்கு எந்த பிரதிநிதித்துவமும் இந்த நிர்வாகம் வழங்காமல் வஞ்சனை செய்துள்ளது.

சக்தி ரமா அடுக்ககம், 3-வது தளம், 'இ' 2/2ஏ, கிழக்கு லோகமான்ய வீதி, இரத்தினசபாபதிபுரம், கோவை-641002. பேசி: 94430 - 84642, 94427 01235


மின் அஞ்சல் : adhiyamaanperavai@gmail.com
இணையதளம் : www.aathithamizharperavai.com




# ஆதித்தமிழர் பேரவை
# AATHITHAMIZHAR PERAVAI

தமிழ்நாடு

நாள் :





7. பாரதியார் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு இந்த 30 ஆண்டு காலத்தில் அவர்களது வாழ்க்கைத் தரம் மேம்படுத்த தகுதி அடிப்படையிலும், பணிமூப்பு அடிப்படையிலும் வழங்கப்பட வேண்டிய அலுவலக உதவியாளர்கள் பதவிகள் வழங்காமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

8. வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலமோ அல்லது விளம்பரத்தின் மூலமோ எந்த பணியாளரும் முன்னுரிமை உள்ளோர் முன்னுரிமை இல்லாதவர் என வகைப்படுத்தி சாதி ரீதியான இடஒதுக்கீடு புள்ளி அரசாணை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை.

9. இப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் கிட்டத்தட்ட 400 தினக்கூலிப் பணியாளர்களில் பட்டியல் இனத்தவர் யாரும் இல்லை. குறிப்பாக அருந்ததியரும் இல்லை.

10. 20~03~2012 அன்று மேற்கண்ட இத்தனை பிரச்சினைகளையும் மீறி பத்திரிக்கையில் விளம்பரம் ஏதும் செய்யாமல், வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்தும் பட்டியல் பெறாமல் முறைகேடாக ஓட்டுநர் பதவிகளுக்காக நேர்காணல் நடத்தி பணியமர்த்தப் போவதாக செய்தி வந்துள்ளது.

11. மேற்கண்ட முறைகேடுகளுக்காக இப் பல்கலைக்கழக நிர்வாகத்தின் மீது ஊழல் தடுப்பு துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதுபற்றி பத்திரிக்கை செய்திகள் வந்தேறியுள்ளது.

12. இப் பல்கலைக்கழகத்தில் 29~09~2008 அன்று ஒரு மிகப் பெரிய விழா நடத்தி மானமிகு ஆசிரியர் கீ. வீரமணி அவர்களையும், பொன்னம்பல அடிகளார் அவர்களையும் அழைத்து புரட்சியாளர் அம்பேத்கர் படத்தையும்,தந்தை பெரியார் படத்தையும் துணைவேந்தர் அறையில் திறந்து வைக்கப்பட்டது.ஆனால் இவர்களது சாதி வெறியின் காரணமாகவும் பட்டியல் இனத்தோர் மீதான வெறுப்பின் காரணமாகவும் சாதிய தீண்டாமை – வன்கொடுமை நடவடிக்கையாக அம்பேத்கர் படத்தையும் பெரியார் படத்தையும் தூக்கி எறிந்து தலைவர்களை அவமானப்படுத்தியுள்ளார்.

மேற்கண்ட முறைகேடுகளை கண்டித்தும் விசாரணை மேற்கொள்ளவும் வலியுறுத்தி ஆதித்தமிழர் பேரவை ஏப்ரல் ~2, 2012 திங்கட்கிழமையன்று இதர ஜனநாயக அமைப்புகளையும் இணைத்து தொடர் முழக்கப் போராட்டம் பல்கலைக்கழக வாசலில் நடத்தும்.

என்றும் ஒடுக்கப்பட்டோர் விடுதலைப்பணியில்,

22-3-2012

இரா.அதியமான்
(நிறுவனர்)

சக்தி ரமா அடுக்ககம், 3-வது தளம், 'இ' 2/2ஏ, கிழக்கு லோகமான்ய வீதி,
இரத்தினசபாபதிபுரம், கோவை-641002. பேசி: 94430 84642, 94427 01235
மின் அஞ்சல் : adhiyamaanperavai@gmail.com
இணையதளம் : www.aathithamizharperavai.com